# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 304 | 4 Pages | 7.4.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 304 | 4 பக்கங்கள் | 7.4.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## இந்தியா கூட்டணியின் வெற்றியால் சர்வாதிகாரத்திற்கு கடிவாளம் போடப்பட்டுள்ளது: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூன் 7

தி.மு.க. தொண்டர்களுக்கு முதல் அமைச்சரும், அக்கட்சியின் தலைவருமான மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி உள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

அன்பு உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவன் எழுதும் வெற்றிக்களத்தின் நன்றி மடல்.மகத்தான வெற்றியை தி.மு.க.வுக்கு மக்கள் அளித்திருக்கிறார்கள். வெற்றிக்கு அயராமல் உழைத்தவர்கள் தொண்டர்களாகிய நீங்களும்தான். தமிழ்நாடு, புதுச்சேரியில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சியினரின் பங்களிப்புடன் 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருக்கிறோம்.இந்த மாபெரும் வெற்றியை ஒட்டுமொத்த இந்தியாவுமே திரும்பிப் பார்க்கிறது. அதன் மூலம் நாட்டை வழிநடத்தும் ஆற்றலுடன் செயல்படவும் முடியும் என்பதை மக்களவைத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டியிருக்கின்றன.



மக்களின் ஆன்மீக நம்பிக்கைகளை அரசியல் சுயலாபத்துக்குப் பயன்படுத்த நினைக்கும் மதவாத சக்திகளை, கோவில் கட்டிய மண்ணிலேயே இறைநம்பிக்கையுள்ள வாக்காளர்கள் வீழ்த்திக்காட்டியிருக்கிறார்கள். சிறுபான்மை மக்களின் நெஞ்சில் இருந்த அச்ச உணர்வு நீங்கியிருக்கிறது. ஒற்றையாட்சி முறைக்கு மக்கள் ஆதரவாக இல்லை என்பதை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

தமிழ்நாட்டிலும் இந்திய அளவிலும் இந்தியா கூட்டணி பெற்றுள்ள வெற்றியால் சர்வாதிகாரத்திற்குக் கடிவாளம் போடப்பட்டுள்ளது.ஜனநாயகத்தின் நம்பிக்கைத் துளிர்கள் அரும்பியுள்ளன. அரசியலமைப்பு வழங்கியுள்ள நெறிமுறைகளைப் பாதுகாக்கின்ற வகையில், நாட்டை வழிநடத்தும் பணியை இந்தியா கூட்டணி மேற்கொள்ளும். அதற்கு நாற்பதுக்கு நாற்பது என்ற மகத்தான வெற்றி பெருந்துணையாக இருக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தமிழக மக்களின் தீர்ப்பை தலைவணங்கி ஏற்றுக் கொள்கிறோம்: அண்ணாமலை பேட்டி

சென்னை, ஜூன் 7

சென்னை பா.ஜ.க. அலுவலகத்தில் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தேசிய அளவில் நேருவுக்கு பிறகு தொடர்ந்து மூன்றாவது முறையாக நரேந்திர மோடி ஆட்சி அமைக்க உள்ளார். மூன்றாவது முறை ஆட்சிக்கு வருவது கடினம்; அதை முறியடித்து பா.ஜ.க. சாதித்துள்ளது.

தமிழகத்தில் மிகக் கடுமையாக உழைத்தோம். ஆனாலும், தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் தமிழகத்தில் இருந்து எம்.பிக்களை மக்களவைக்கு அனுப்ப இயலவில்லை.

தமிழக மக்களின் தீர்ப்பை தலைவணங்கி ஏற்றுக் கொள்கிறோம்.




தமிழகத்தில் பா.ஜ.கவுக்கு மக்கள் கொடுத்துள்ள தீர்ப்பு மூலம் இன்னும் கடினமாக உழைக்க வேண்டும் என்பதை உணர்ந்துள்ளோம். சில இடங்களில் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் பா.ஜ.க. வெற்றியை இழந்துள்ளது. தவறு எங்கு நேர்ந்தது என்பதை ஆராய்ந்து அடுத்த முறை சரி செய்வோம்.

கோவை மக்களவைத் தொகுதியில் பணம் கொடுக்காமல் எனக்கு 4 லட்சம் வாக்குகள் கிடைத்துள்ளன. தமிழகத்தில் பா.ஜ.கவின் வாக்கு சதவீதம் அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் பா.ஜ.க. வளர்ந்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. திராவிட கட்சிகளின் தோளில் பயணிக்காமல் தனித்து நின்று பா.ஜ.க. வளர்கிறது. நேர்மையான அரசியலை முன்னெடுக்க உள்ளோம். தமிழகத்தில் 2026ல் பா.ஜ.க ஆட்சி என்பதே எங்களது இலக்கு. இரண்டாவது முறையாக வெற்றி பெற்ற தி.மு.க. கூட்டணிக்கு வாழ்த்துகள்.

இவ்வாறு அவர் கூறினார்.

## சத்தியமங்கலம் புனித அந்தோனியார் ஆண்டு பெருவிழா

செஞ்சி: ஜூன். 7

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த சத்தியமங்கலம் கிராமத்தில் நூற்றாண்டை கடந்த மிகவும் பழமை வாய்ந்த புனித அந்தோணியார் ஆலயம் உள்ளது. இங்கு ஆண்டு தோறும் ஜூன் மாதம் 5ம் தேதி தொடங்கி 14 ம் தேதி வரை பெருவிழா வெகுவிமரிசையாக நடைபெறும்.

அதன்படி, இந்த ஆண்டுக்கான பெருவிழா நேற்று கொடி ஏற்றத்துடன் தொடங்கியது. இதையொட்டி, ஆலயத்தில் காலை, மாலையில் திருப்பலி நிறைவேற்றினர். மாலை 5 மணிக்கு மேல் திருக்கொடி ஊரைச் சுற்றி பவனியாக கொண்டுவரப்பட்டது. தொடர்ந்து ஆராதனைகள் நடந்து, திருத்தல பங்கு தந்தை எ.சிறில், தலைமையில் சிறப்பு விருந்தினராக மண்ணின் மைந்தர் A.அருளானந்தம் விழுப்புரம் வட்டார முதன்மை குரு மறைமாவட்ட தலைமையேற்று 100அடி உயரம் உள்ள கொடிமரத்தில் புனித அந்தோனியார் பெருவிழா கொடியை ஏற்றினார். இதில் மறை



மாவட்ட அருள் தந்தையர்கள், அருள் சகோதரிகள், காரியக்காரர்கள், பங்கு இறைமக்கள் மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## விருதுநகரில் விஜயபிரபாகர் சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்டுள்ளார்: பிரேமலதா ஆவேசம்

சென்னை, ஜூன் .7

சென்னை கோயம்பேட்டில் உள்ள அலுவலகத்தில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

விஜயபிரபாகர் தோல்வியடையவில்லை தோற்கடிக்கப்பட்டுள்ளார்; வீழ்ச்சியடையவில்லை சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்டிருக்கிறார் இதுதான் உண்மை. அதற்கான ஆதாரங்கள் எல்லாம் என்னிடம் உள்ளது. விஜயபிரபாகர் கடைசி நிமிடங்கள் வரை போராடினார்.

மிக மிக குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலேயே விஜய பிரபாகர்



தோற்கடிக்கப்பட்டிருக்கிறார். 3 மணி முதல் 5 மணிவரை வாக்கு எண்ணிக்கையை ஆட்சியர் நிறுத்தியது ஏன்?. விருதுநகர் தொகுதி முடிவு அறிவிக்கும் முன் 40 தொகுதிகளில் வெற்றி என முதல்வர் கூறியது ஏன்?. 13வது சுற்றுக்கு பின்னர் பல முறைகேடுகள் நடந்தது உண்மை.

அதிகாரப்பூர்வ அறிவிப்பும், களத்தில் இருந்து வந்த தகவல்களும் முரண்பாடாக இருந்தன. தபால் ஓட்டுகளை நள்ளிரவில் எண்ணியதுஏன்?.விருதுநகர் ஆட்சியருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது; அவரது போனை சுவிட்ச் ஆப் செய்துள்ளார். வாக்கு எண்ணிக்கையில் குளறுபடி நடந்துள்ளது.விருதுநகர் தொகுதியில் ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் மறுவாக்கு எண்ணிக்கை நடைபெற வேண்டும். இது தொடர்பாக தேர்தல் ஆணையத்தில் மனு அளித்துள்ளோம். தேர்தல் ஆணையம் நல்ல முடிவை கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. 45 நாட்கள் வரை மறு வாக்கு எண்ணிக்கை கோர உரிமை உள்ளது. தேர்தல் ஆணையம் உரிய நீதியை வழங்க வேண்டும். அதிமுகவினர் அனைவரும் ஒற்றுமையாக இருந்தால் வெற்றி உறுதியாக கிடைக்கும். அதிமுகவில் இருப்பது உட்கட்சி பிரச்சினை. அதிமுகவில் அனைவரும் ஒன்று சேர்ந்தால் அது வரவேற்கத்தக்கது.

இவ்வாறு அவர் கூறினார்.

## தென்கொரியாவை இணைக்கும் ரெயில் தண்டவாளங்களை தகர்த்த வடகொரியா

சியோல், ஜூன் 7

கொரிய தீபகற்ப நாடுகளான தென்கொரியாவடகொரியா இடையே பகை உணர்வு அதிகரித்து வருகிறது. அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுடன்நட்பு பாராட்டி வருவதை மேற்கொள்காட்டி வடகொரியா தலைவர் கிம் ஜங் அன் தென்கொரியாவை பரம விரோதியாக அறிவித்தார். மேலும் வடகொரியாவில் தென்கொரியா உடனான நட்புறவை குறிக்கும் வகையிலான நினைவு கட்டிடங்கள், சின்னங்கள் ஆகியவற்றை அழிக்க உத்தரவிட்டார்.

இந்தநிலையில் வடகொரியாவை தென்கொரியாவுடன் இணைக்கும் வகையிலாக அமைக்கப்பட்டிருந்த ரெயில் தண்டவாளங்களை வடகொரியா ராணுவம் கண்ணிவெடிகளை புதைத்தும், வெடிகுண்டுகளை வீசியும் தகர்த்து வருவதாக தென்கொரியா உளவு அமைப்பு தகவல் தெரிவித்துள்ளது.

## மேற்கு நாடுகள் மீது அதிரடி தாக்குதல் நடத்தப்படும்; புதின் எச்சரிக்கை



செயின்ட் பீட்டர்ஸ்பர்க், ஜூன் 7

உக்ரைன் மற்றும் ரஷியா இடையேயான போரானது 2 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வருகிறது. இதில், இரு தரப்பிலும் மக்கள் மற்றும் வீரர்கள் உயிரிழந்து வருகின்றனர்.

உக்ரைனுக்கு, அமெரிக்கா மற்றும் ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற சில ஐரோப்பிய நாடுகள் ஆதரவு தெரிவித்து வருகின்றன. இந்நிலையில், ரஷியா மீது உக்ரைன் சமீபத்தில் தாக்குதல் நடத்தியது.அதில்,ஜெர்மனிநாட்டின்ஆயுதங்கள்பயன்படுத்தப்பட்டது.

ரஷியாவின் மீது தாக்குதல் நடத்த ஜெர்மனியின் ஆயுதங்களை உக்ரைன் பயன்படுத்தி இருப்பது, ஆபத்து ஏற்படுத்தும் நடவடிக்கை என்று ரஷிய அதிபர் புதின் குறிப்பிட்டார்.

மேற்கு நாடுகளை தாக்க நீண்ட தொலைவு சென்று தாக்க கூடிய ஆயுதங்களை, வேறு சில நாடுகளுக்கு ரஷியா வழங்க கூடும் என்று எச்சரிக்கை விடும் வகையிலும் அவர் பேசியுள்ளார்.

ரஷியாவுக்கு எதிராக தாக்குதலில் ஈடுபட்ட உக்ரைன், ஜெர்மனியின் ஆயுதங்களை பயன்படுத்தியுள்ளது என கூறப்படுகிறது. இந்த குற்றச்சாட்டை தெரிவித்த ரஷியா, ஜெர்மனிக்கு எச்சரிக்கை வெளியிட்டது.

எங்களுடைய நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என தெரிய வந்தால், அணு ஆயுதங்களை பயன்படுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம் என புதின் மீண்டும் உறுதிப்பட கூறியுள்ளார்.

ரஷியாவின் சில பகுதிகள் மீது நீண்ட தொலைவு சென்று தாக்க கூடிய ஆயுதங்களை உக்ரைன் நாட்டுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் சமீபத்தில் அங்கீகரித்திருந்தது.

## முதல் பெண் அதிபர் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில்... மெக்சிகோவில் நடுரோட்டில் சுட்டுக் கொல்லப்பட்ட பெண் மேயர்

மெக்சிகோ சிட்டி, ஜூன் 7

அமெரிக்காவின் அண்டை நாடான மெக்சிகோவில் போதை கும்பல்கள், சட்டவிரோத ஆயுத பரிமாற்றம், பயங்கரவாதம், கள்ளநோட்டு புழக்கம் என நாடு முழுவதும் குற்ற சம்பவங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

குற்ற சம்பவங்களின் கூடாரமாக விளங்கும் மெக்சிகோவில் நிழல் உலக தாதாக்கள், ரவுடிகள், கூலிப்படையினரை கட்டுப்படுத்த முடியாமல் ஜனநாயகமும், சட்ட திட்டங்களும் செயலிழந்து வருகின்றன. இந்தநிலையில் கடந்த ஜூன் 2ந்தேதி மெக்சிகோவில் பொதுத்தேர்தல் நடந்தது.



புதிய அதிபர், பிரதிநிகள் சபையின் 500 உறுப்பினர்கள், குடியரசு செனட் சபையின் 128 உறுப்பினர்கள் ஆகியோரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடந்தது. இந்த தேர்தலுடன் உள்ளாட்சி தேர்தலும் நடந்து முடிந்தது. ஒரே கட்டத்தில் நடந்து முடிந்த இந்த தேர்தலில் ஆளுங்கட்சியான மொரேனா கட்சியை சேர்ந்த கிளாடியா சீன்பாம் வெற்றி பெற்றார். அவர் 58.75 சதவீத வாக்குகளை பெற்றார். இதன் மூலம் மெக்சிகோவின் முதல் பெண் அதிபர் என்ற பெருமை அவர் பெறுகிறார். மேலும் நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தலில் மிசோகன் மாகாணம் கோடிஜா நகர் மேயராக யோலன்டா சான்சஸ் என்பவர் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இந்தநிலையில் யோலன்டா உடற்பயிற்சி கூடத்திற்கு சென்றுவிட்டு வீடு திரும்பி கொண்டிருந்தார்.

அப்போது வேன் ஒன்று சாலையில் சென்று கொண்டிருந்த யோலன்டாவை வழிமறித்தது. பின்னர் அதிலிருந்து இறங்கிய மர்ம கும்பல் ஒன்று யோலன்டாவை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுவிட்டு தப்பியது. இதில் தலை, கழுத்து, மார்பு பகுதி என பல்வேறு இடங்களில் குண்டுகள் பாய்ந்ததில் சம்பவ இடத்திலேயே ரத்தவெள்ளத்தில் யோலன்டா சான்சஸ் உயிரிழந்தார்.

மெக்சிகோவில் முதல் பெண் அதிபர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில் பெண் மேயரை மர்ம நபர்கள் சுட்டு கொன்ற விவகாரம் அங்கே கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

# உல்லாசத்துக்கு மறுத்த புதுப்பெண்... மதுபோதையில் காதல் கணவன் செய்த வெறிச்செயல்



செஞ்சி, ஜூன் 7

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே வீரணாமூரைசேர்ந்தவர்காமராஜ். இவருடைய மகன் சுகுமார் (வயது 28), தொழிலாளி. இவருக்கும், வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தாலுகா அத்தியூர் கிராமத்தில் உள்ள கலந்தமேடு பகுதியை சேர்ந்த சுப்பிரமணி மகள் திவ்யா (20) என்பவருக்கும் கடந்த ஓராண்டுக்கு முன்பு பேஸ்புக் மூலம் பழக்கம் ஏற்பட்டது.

ஆரம்பத்தில் இருவரும் நட்பாக பழகி வந்துள்ளனர். நாளடைவில் இவர்களது பழக்கம் காதலாக மலர்ந்தது. இருவரும் செல்போனில் அடிக்கடி பேசி காதலித்து வந்துள்ளனர். ஒருகட்டத்தில் இவர்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர்.

அதன்படி, கடந்த ஏப்ரல் மாதம் 15ந்தேதி இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. சுகுமாருக்கு திருமணத்திற்கு முன்பே மது குடிக்கும் பழக்கம் இருந்ததாக தெரிகிறது. இது புது வாழ்க்கையில் பல கனவுகளுடன் இருந்த புதுப்பெண் திவ்யாவுக்கு இடியாய் அமைந்தது.

மன கவலையுடன் இருந்த திவ்யா தனது கணவருக்கு அவ்வப்போது அறிவுரை கூறி வந்துள்ளார். இருப்பினும் சுகுமார் தினசரி மது குடித்துவிட்டு வீட்டிற்கு வந்துள்ளார்.

இதனால் கணவன்மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் காலையும் சுகுமார் வழக்கம் போல் மதுகுடித்துவிட்டு வீட்டிற்கு வந்தார். அப்போது மனைவியை அவர் உல்லாசத்திற்கு அழைத்ததாக தெரிகிறது. ஆனால், சுகுமார் மதுபோதையில் இருந்ததால், திவ்யா அதற்கு மறுத்து அவரை தன் அருகில் நெருங்கவிடாமல் தள்ளிவிட்டுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த சுகுமார் அருகில் கிடந்த இரும்புக்கம்பியால் திவ்யாவின் தலையில் சரமாரியாக தாக்கியதாக கூறப்படுகிறது. இதில் ரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்த அவர், சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். உடனே, சுகுமார் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

இதுபற்றி அறிந்ததும் செஞ்சி போலீஸ் இன்ஸ்பெக்டர் பார்த்தசாரதி தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, திவ்யாவின் உடலை பார்வையிட்டு அக்கம்பக்கத்தினரிடம் விசாரணை நடத்தினர்.

இதனிடையே அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக செஞ்சி அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். இதுகுறித்து செஞ்சி போலீசார் வழக்குப்பதிவு செய்து, சுகுமாரை கைது செய்தனர். உல்லாசத்திற்கு மறுத்த புதுப்பெண்ணை கணவனே அடித்துக்கொலை செய்த சம்பவம் செஞ்சி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# அரசு வேலைக்காக காத்திருக்கும் 53 லட்சம் பேர் தமிழக அரசு வெளியிட்ட தகவல்



சென்னை, ஜூன் 7

தமிழகத்தில் பள்ளி, கல்லூரி படிப்பை முடித்தவர்கள் உள்பட பலர் அரசு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பெயர்ப் பதிவு செய்து வருகின்றனர். அந்த வகையில் கடந்த மே மாதம் 31ந் தேதி வரை 53 லட்சத்து 48 ஆயிரத்து 663 பேர், அரசு வேலைக்காக பெயர்ப் பதிவு செய்து காத்துக் கொண்டு இருக்கின்றனர் என்ற விவரத்தை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

அதன்படி, அவர்களில் ஆண்கள் 24 லட்சத்து 63 ஆயிரத்து 81; பெண்கள் 28 லட்சத்து 85 ஆயிரத்து 301; மூன்றாம் பாலினத்தவர் 281 ஆகும். அவர்களில் 18 வயதுக்கு உட்பட்ட பள்ளி, கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை 10 லட்சத்து 72 ஆயிரத்து 353; 19 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கை 23 லட்சத்து 27 ஆயிரத்து 649; 31 முதல் 45 வயதுக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கை 16 லட்சத்து 93 ஆயிரத்து 40;

46 முதல் 60 வயதுக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 47 ஆயிரத்து 811; 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை 7,810 ஆகும். அவர்களில் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை 1.50 லட்சமாகும்.

# நாடாளுமன்றம் செல்லும் 5 பெண் தமிழக எம்.பி.க்கள்



சென்னை, ஜூன் 7

தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு முறை அமலுக்கு வந்துள்ளது. இதேபோன்று சட்டசபையிலும், நாடாளுமன்றத்திலும் 33 சதவீத இடஒதுக்கீடு அமல்படுத்த வேண்டும் என்று பெண்கள் அமைப்பினர் அரசுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதற்கிடையே நாடாளுமன்றத்திலும், சட்டசபைகளிலும் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் மசோதா நீண்ட நெடிய காலத்திற்கு பிறகு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு உள்ளது. இருந்தாலும் அவை முறையாக நடைமுறைக்கு இன்னும் வரவில்லை.

இதற்கிடையே நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் என 945 பேர் போட்டியிட்டதில் 77 பெண் வேட்பாளர்கள் ஆவார்கள். இது 8 சதவீதம் ஆகும். நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 39 தொகுதிகளில் போட்டியிட்ட பெண் வேட்பாளர்களில் தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்ட கனிமொழி (தி.மு.க.) வெற்றி பெற்றார்.

இதேபோல், தென் சென்னை தொகுதியில் தமிழச்சி தங்கப்பாண்டியன் (தி.மு.க.), தென்காசி தொகுதியில் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் (தி.மு.க), கரூரில் ஜோதிமணி (காங்கிரஸ்), மயிலாடுதுறை தொகுதியில் வக்கீல் சுதா (காங்கிரஸ்) ஆகிய 5 பேர் மட்டும் வெற்றி பெற்று உள்ளனர்.

இதில் தி.மு.க. சார்பில் 3 பேரும், காங்கிரஸ் கட்சி சார்பில் 2 பெண் வேட்பாளர்களும் ஆவார்கள்.

தமிழகத்தில் இருந்து 34 ஆண் எம்.பி.க்களும், 5 பெண் எம்.பி.க்களும் நாடாளுமன்றத்திற்கு செல்ல உள்ளனர். தர்மபுரி தொகுதியில் பா.ம.க. சார்பில் போட்டியிட்ட சவுமியா அன்புமணி, தென் சென்னை தொகுதியில் பா.ஜனதா சார்பில் போட்டியிட்ட டாக்டர்தமிழிசை சவுந்தரராஜன் ஆகியோர் குறைவான ஓட்டு வித்தியாசத்தில் தோல்வி அடைந்து நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்பை இழந்து விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீட் தேர்வில் 720க்கு 720 மதிப்பெண் பெற்று விழுப்புரம் மாணவர் சாதனை



விழுப்புரம், ஜூன். 7

202425ம் கல்வியாண்டுக்கான நீட் தேர்வு நாடு முழுவதும் 571 நகரங்களில் 13 மொழிகளில் கடந்த மே மாதம் 5ந்தேதி நடந்தது. இந்த தேர்வு முடிவு நேற்று முன்தினம் இரவு வெளியானது. இதில் 5 லட்சத்து 47 ஆயிரத்து 36 மாணவர்கள், 7 லட்சத்து 69 ஆயிரத்து 222 மாணவிகள், 10 திருநங்கைகள் என 13 லட்சத்து 16 ஆயிரத்து 268 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்களில் தமிழ்நாட்டை சேர்ந்த 8 மாணவமாணவிகள் உள்பட 67 பேர் 720க்கு 720 மதிப்பெண் பெற்று அகில இந்திய அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளனர். அந்த வகையில், விழுப்புரம் வழுதரெட்டி பகுதியை சேர்ந்த பிரபாகரன்விமலாதேவி தம்பதியின் மகனான ரஜநீஷ் என்ற மாணவர், நீட் தேர்வில் 720 மதிப்பெண்களுக்கு 720 மதிப்பெண் எடுத்து சாதனை படைத்ததோடு விழுப்புரம் மாவட்டத்திற்கும் பெருமை சேர்ந்துள்ளார். இவர் நாமக்கல்லில் உள்ள கிரீன் பார்க் இண்டர்நேஷனல் பள்ளியில் 11, 12ம் வகுப்பு படித்தார். அதே பள்ளியில் நீட் தேர்விற்கான சிறப்பு வகுப்புகளில் பயிற்சி பெற்று வந்த நிலையில் தற்போது நீட் தேர்வில் முழு மதிப்பெண் பெற்று சாதித்துள்ளார்.

இதுபற்றி மாணவர் ரஜநீஷ் கூறுகையில், மருத்துவத்தில் இதய அறுவை சிகிச்சை மருத்துவராக வேண்டும் என்பது என்னுடைய நீண்ட நாள் கனவாகும். தற்போது அதற்கான பலன் கிடைத்துள்ளது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. ஆகவே நீட் தேர்வில் சாதிக்க நினைப்பவர்கள், கடின உழைப்புடனும், தன்னம்பிக்கையுடனும் படித்தால் எளிதில் சாதிக்கலாம். குறிப்பாக ஆன்லைன் தோ'வு (மாக் டெஸ்ட்) அதிகமாக எழுதினால் அதிக மதிப்பெண் எடுக்கலாம் என்றார்.

ரஜநீஷின் தந்தை பிரபாகரன், திருச்சியில் ரெயில்வே அதிகாரியாக பணியாற்றி வருகிறார். தாய் விமலாதேவி விழுப்புரம் சாலாமேட்டில் உள்ள எம்.ஜி.ஆர். அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் கணித துறைத்தலைவராக பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கூட்டணி ஆட்சியை வழிநடத்துவதில் பா.ஜ.க.வுக்கு நீண்ட அனுபவம் உள்ளது வானதி சீனிவாசன்



சென்னை, ஜூன் 7

பா.ஜ.க. தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. தனித்து 240 இடங்களிலும், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 292 இடங்களில் வென்றுள்ளது. இந்த வெற்றி என்பது சாதாரணமானது அல்ல. வரலாற்று வெற்றி. சுதந்திர இந்தியாவின் 77 ஆண்டுகளில், நாட்டின் முதல் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேருவால் மட்டுமே தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியை தக்க வைக்க முடிந்தது. இந்திய அரசியலில் 17 ஆண்டுகள் பெரும் செல்வாக்குடன் வலம் வந்த இந்திரா காந்தியால் கூட தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியை தக்க வைக்க முடியவில்லை. 1977 மக்களவைத் தேர்தலில் இந்திரா காந்தி, தான் போட்டியிட்ட தொகுதியிலேயே தோற்றுப் போனார்.

இந்திரா மறைவுக்குப் பிறகு 1984ல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் 400க்கும் அதிகமான இடங்களில் வென்று ஆட்சியைப் பிடித்த ராஜீவ் காந்தியால், இரண்டாவது முறை ஆட்சியை தக்க வைக்க முடியவில்லை. ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட பிறகு நடந்த 1991 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு 244 இடங்களே கிடைத்தன. பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆனாலும் நரசிம்மராவ் தலைமையில் 5 ஆண்டு காலம் காங்கிரஸ் ஆட்சி நடந்தது.


1989ல் இருந்து இந்தியாவில் கூட்டணி ஆட்சிக் காலம் தொடங்கியது. 2014 மக்களவைத் தேர்தல் முடிவுகள் வெளியாவதற்கு முதல் நாள் வரை கூட, "இனி இந்தியாவில் கூட்டணி ஆட்சி தான். எந்தவொரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்காது" என்றே அனைவரும் நம்பினார். ஆனால், 2014ல் 282, 2019ல் 303 என பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பா.ஜ.க. தனிப்பெரும்பான்மை பெற்றது. 1984 அதாவது 30 ஆண்டுகளுக்குப் பிறகு தனிப்பெரும்பான்மையுடன் ஒரு கட்சி ஆட்சி அமைத்தது அதுவே முதல்முறை.

1962க்கு பிறகு தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியை தக்கவைத்துள்ள பா.ஜ.க., அடுத்த 5 ஆண்டுகளுக்கு முழுமையாக நல்லாட்சியை வழங்கும். ஏனெனில் கூட்டணி ஆட்சியை வழிநடத்துவதில் பா.ஜ.க.வுக்கு நீண்ட அனுபவம் உள்ளது. இந்தியாவில் முதல்முறையாக 20க்கும் அதிகமான கட்சிகளுடன் கூட்டணி ஆட்சியை முழுமையாக 5 ஆண்டுகளுக்கு வெற்றிகரமாக நடத்தியது பா.ஜ.க. தான். அதன் பிறகு தான் இந்தியாவில் கூட்டணி ஆட்சியை முழுமையாக ஐந்து ஆண்டுகளுக்கும் நடத்த முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது.

1999ல் கூட்டணி ஆட்சியை வாஜ்பாய் வெற்றிகரமாக நடத்தியபோது பா.ஜ.க. பெற்ற இடங்கள் 182 மட்டுமே. ஆனால், இப்போது பா.ஜ.க.வுக்கு மட்டுமே 240 எம்பிக்கள் உள்ளனர். அதுவும் 10 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சிக்குப் பிறகு. எவ்வளவு பெரிய சாதனை. 96 கோடிக்கும் அதிகமான வாக்காளர்களைக் கொண்ட உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் தொடர்ந்து இரண்டாவது முறை ஆட்சியை தக்க வைப்பதே பெரும் சாதனை. ஆனால் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியை தக்க வைத்துள்ளது.

காங்கிரஸ் கட்சி தொடர்ந்து மூன்றாவது முறையாக 100ஐ தொடமுடியவில்லை. காங்கிரஸ் உள்ளிட்ட 'இண்டி' கூட்டணி கட்சிகள் பெற்ற ஒட்டுமொத்த இடங்களை விட, பா.ஜ.க. மட்டுமே பெற்ற இடங்கள் அதிகம். பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு பெரும்பான்மையை விட 20 இடங்கள் அதிகமாக கிடைத்துள்ளது. இந்த வரலாற்று வெற்றியை எதிர்க் கட்சிகளும், சில ஊடகங்களும், நடுநிலையாளர் போர்வையில் பா.ஜ.க.வை மட்டும் எதிர்ப்பவர்களும், பா.ஜ.க.வுக்கு ஏற்பட்ட தோல்வி என்பதைப் போன்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி வருகின்றனர் ஊடகங்களில் அவ்வாறே விவாதங்கள் நடக்கின்றன. ஆனால், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி பெரும்பான்மைக்கும் தேவையான இடங்களை தாண்டி வெற்றி பெற்றிருப்பது பெரும் சாதனை. வரலாற்று வெற்றி. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# கோவையில் அண்ணாமலை தோல்வி: சாலையில் அமர்ந்து மொட்டை அடித்துக்கொண்ட பாஜக நிர்வாகி



உடன்குடி, ஜூன் 7

கோவை நாடாளுமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பில் கணபதி ராஜ்குமாரும், அ.தி.மு.க. சார்பில் சிங்கை ராமச்சந்திரனும், பாஜக சார்பில் மாநில தலைவர் அண்ணாமலையும், நாம் தமிழர் கட்சி சார்பில் கலாமணியும் என மொத்தம் 37 பேர் போட்டியிட்டனர்.

இதில் தி.மு.க. வேட்பாளர் கணபதி ராஜ்குமார் 5,64,662 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட பாஜக வேட்பாளர் அண்ணாமலை 4,47,101 வாக்குகளும், அ.தி.மு.க. வேட்பாளர் சிங்கை ராமச்சந்திரன் 2,35,313 வாக்குகளும், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் 82,273 வாக்குகளும் பெற்றனர்.

தி.மு.க. வேட்பாளர் கணபதி ராஜ்குமார், தன்னை எதிர்த்து போட்டியிட்ட அண்ணாமலையை 1 லட்சத்து 17 ஆயிரத்து 561 வாக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றார். கோவையில் அண்ணாமலையின் தோல்வி பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

இதற்கிடையில், தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் உடன்குடி யூனியன் பரமன்குறிச்சி அருகே உள்ள முந்திரிதோட்டம் ஜெயசங்கர் என்பவர் கோவையில் பாஜக தலைவர் அண்ணாமலை முழுமையாக வெற்றி பெறுவார், வெற்றி பெறவில்லை ஆனால் நான் மொட்டையடிப்பேன் என்று மாற்று கட்சி நண்பர்களிடம் பந்தயம் கட்டியுள்ளார்.

இந்த நிலையில் தேர்தலில் அண்ணாமலைதோல்வி அடைந்ததையடுத்து மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் பரமன்குறிச்சி பஜாரில் உள்ள சாலையில் ஜெயசங்கர் அமர்ந்து கொண்டு மொட்டை போட்டுக்கொண்டு பஜாரில் உள்ள ரவுண்டானாவை சுற்றி வந்து பந்தயத்தை நிறைவேற்றினார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இவர் உடன்குடி ஒன்றிய பாஜகவின் நலதிட்ட பிரிவு பொதுச்செயலாளராக இருக்கிறார்.

# கோவை: தாயை பிரிந்து தனியாக தவித்து வரும் குட்டி யானை



கோவை, ஜூன் 7

கோவை மருதமலை வனப்பகுதியில் பெண் யானை உடல் நலம் பாதிப்படைந்த நிலையில் வனப்பகுதியில் படுத்து கிடந்தது. அதன் அருகே 4 மாத குட்டி யானையும் நின்றது. வனத்துறையினர் பொக்லைன் மூலம் பெண் யானையை தூக்கி நிறுத்தி சிகிச்சை அளித்தனர். உடல்நலம் தேறிய பின்னர் அந்த யானை வனப்பகுதிக்குள் சென்றது. இதற்கிடையே, யானைக்கு சிகிச்சை அளிக்கும்போது தாய் யானையிடம் இருந்து குட்டி யானை பிரிந்து மற்றயானைகூட்டத்துடன் சுற்றி திரிந்தது.

இந்தநிலையில் குட்டி யானை நேற்று காலை விராலியூர் அருகே உள்ள பச்சான் வயல் என்ற இடத்தில் தனியாக தவித்தபடி நின்றது.

இதுபற்றிய தகவல் கிடைத்ததும், வனத்துறையினர் குட்டி யானையை மீட்டு ஜீப்பில் ஏற்றி கோவை மருதமலை வனப்பகுதி அருகே உள்ள யானை மடுவு பகுதிக்கு கொண்டு வந்தனர்.

பின்னர் அந்த குட்டி யானைக்கு புட்டி பால் கொடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து குட்டி யானையை தாயுடன் சேர்ப்பதற்காக தாய் யானை நடமாடும் வனப் பகுதியில் கொண்டுபோய் விட்டனர். குட்டி யானை விடப்பட்ட பகுதியில் இருந்து தாய் யானை 200 மீட்டர் தொலைவில் நின்று வருவதாகவும், தாய் யானையை சுலபமாக கண்டுபிடித்து குட்டி யானை தாயுடன் சேர்ந்து விடும் என்றும் வனத்துறையினர் நம்பிக்கை தெரிவித்தனர்.

# கன்னியாகுமரியில் நில அதிர்வு: மக்கள் அச்சம்

குமரி, ஜூன் 7

உலகபுகழ் பெற்ற சுற்றுலாதலமான கன்னியாகுமரிக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். ஆண்டு முழுவதும் சுற்றுலா பயணிகள் வந்து செல்வதால் கன்னியாகுமரி எப்போதும் பரபரப்பாக இருக்கும்.

இந்த நிலையில் கன்னியாகுமரி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று திடீரென நில அதிர்வு ஏற்பட்டது. குண்டல், சுவாமிநாதபுரம், சர்ச் ரோடு மற்றும் வாவத்துறை ஆகிய பகுதிகளில் மாலை 6 மணி அளவில் லேசான நில அதிர்வை மக்கள் உணர்ந்துள்ளனர். ஒரு சில வினாடிகள் மட்டுமே இந்த நில அதிர்வானது உணரப்பட்டு இருக்கிறது.

நில அதிர்வு ஏற்பட்டவுடன் சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் உடனடியாக வீட்டுக்குள் இருந்து அலறியடித்துக்கொண்டுவெளியே ஓடி வந்தனர். சர்ச் ரோடு பகுதியில் வீடுகள் இடிந்து விடுமோ என்ற அச்சத்துடனே ரோட்டில் மக்கள் நின்றனர். ஆனால் அதன் பிறகு நில அதிர்வு ஏற்படவில்லை. சில வினாடிகள் மட்டுமே உணரப்பட்ட இந்த நில அதிர்வால் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இச்சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

கன்னியாகுமரி பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்ட அதே நேரத்தில் நெல்லை மாவட்டத்தின் கூடங்குளம் உள்ளிட்ட குமரி மாவட்ட எல்லையோர பகுதிகளிலும் நில அதிர்வு உணரப்பட்டதாக கூறப்படுகிறது

## கடன் கேட்டு வந்தபோது மலர்ந்த காதல்... வீட்டை விட்டு வெளியேறி காதலனை கரம் பிடித்த பட்டதாரி பெண்



திண்டுக்கல், ஜூன் 7

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி தாலுகா பெருமகளூரை சேர்ந்தவர் அனுஷ்வர்யா (வயது 24) எம்.ஏ.,பிஎட் பட்டதாரி. திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரை அடுத்த தாழையூத்து பட்டியை சேர்ந்தவர் மகேஷ்குமார் (33). இவர், பேராவூரணி பகுதியில் நிதி நிறுவனம் நடத்தி வருகிறார்.

அந்த நிதி நிறுவனத்துக்கு கடன் கேட்டு அனுஷ்வர்யா சென்றார். அப்போது அனுஷ்வர்யாவுக்கு, மகேஷ்குமாரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்த சந்திப்பு, நாளடைவில் காதலாக மலர்ந்தது. கடந்த 2 ஆண்டுகளாக இவர்கள் காதலித்து வந்தனர்.

இதற்கிடையே மகேஷ்குமார் அனுஷ்வர்யா காதல் விவகாரம் இருதரப்பு பெற்றோருக்கும் தெரியவந்தது. இதற்கு பெண்ணின் பெற்றோர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து காதல் ஜோடி இருவரும் வீட்டைவிட்டு வெளியேறி முறுநெல்லிக்கோட்டை ஊராட்சி சுள்ளெறும்பில் உள்ள துர்க்கை அம்மன் கோவிலில் திருமணம் செய்து கொண்டனர்.

பின்னர் அவர்கள் பாதுகாப்பு கேட்டு வேடசந்தூர் போலீஸ் நிலையத்தில் நேற்று தஞ்சம் அடைந்தனர். இதனையடுத்து இருதரப்பு பெற்றோரையும் வரவழைத்து போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் பாண்டியன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பேச்சுவார்த்தையில் மகேஷ்குமாரின் பெற்றோர் திருமணத்தை ஏற்றுக்கொண்டு 2 பேரையும் தங்கள் வீட்டிற்கு அழைத்துச்சென்றனர். பெண்ணின் பெற்றோர் மணமக்களுக்கு எந்தவித இடையூறும் செய்ய மாட்டோம் என்று எழுதிக்கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## கன்னியாகுமரியில் கடல் உள் வாங்கியதால் சுற்றுலா படகு தரை தட்டியது



கன்னியாகுமரி, ஜூன்7

கன்னியாகுமரி கடலில் சுனாமிக்கு பிறகு அடிக்கடி மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அந்த அடிப்படையில் கடல் உள் வாங்குவது, நீர்மட்டம் தாழ்வது, உயர்வது, கடல் சீற்றம் போன்ற பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. குறிப்பாக அமாவாசை, பவுர்ணமி போன்ற நாட்களில் இந்த இயற்கை மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் பவுர்ணமி முடிந்த நிலையில் இன்று காலை கன்னியாகுமரி கடல் திடீர் என்று உள்வாங்கி நீர்மட்டம் தாழ்ந்து காணப்பட்டது. இதனால் கன்னியாகுமரி பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக படகு துறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுற்றுலா படகுகள் தரைதட்டி நின்றன. இதனால் கன்னியாகுமரி கடல் நடுவில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு காலை 8 மணிக்கு தொடங்கப்பட வேண்டிய படகு போக்குவரத்துதொடங்கப்படாமல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் 133அடிஉயரதிருவள்ளுவர் சிலை அமைந்துள்ள வங்க கடல் பகுதி நீர்மட்டம் தாழ்ந்து காணப்பட்டது.

அதே வேளையில் இந்திய பெருங்கடல் மற்றும் அரபிக்கடல் பகுதியில் கடல் கொந்தளிப்புடனும் சீற்றமாகமாகவும் காணப்பட்டது. இதன் காரணமாக சுற்றுலா படகு போக்குவரத்து ரத்து செய்யப்பட்டது. இன்று காலை விவேகானந்தர் நினைவு மண்டபத்தை படகில் சென்று பார்ப்பதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக படகுத்துறை நுழைவு வாயிலில் 2 மணி நேரம் காத்திருந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

இதற்கிடையில் காலை 10 மணிக்கு கடல் சகஜ நிலைக்கு திரும்பியதை தொடர்ந்து 2 மணி நேரம் தாமதமாக விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு படகு போக்குவரத்து தொடங்கியது. அதைத் தொடர்ந்து சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் படகில் பயணம் செய்து விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட்டு வந்தனர்.

## மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் `செட்' தகுதி தேர்வு ஒத்திவைப்பு



நெல்லை, ஜூன் 7

கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உதவிப் பேராசிரியர் பணியில் சேர "நெட்" (தேசிய தகுதித் தேர்வு) அல்லது "செட்" (மாநில அளவிலான தகுதித் தேர்வு) ஆகியவற்றில் தேர்ச்சி பெற வேண்டும்.

நெட் தேர்வில் தேர்ச்சி பெற்றால் இந்தியா முழுவதும் எந்த பல்கலைக்கழகத்திலும் அல்லது கல்லூரியிலும் உதவிப் பேராசிரியராகலாம். செட் தேர்வில் தேர்ச்சி பெறுவோர் அந்த மாநிலத்தில் மட்டுமே பணிபுரிய முடியும்.

அந்த வகையில், தமிழகத்தில் நடத்தப்படும் செட் தேர்வில் தேர்ச்சி பெறும்போது தமிழக பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் ஆகலாம்.

இந்த தேர்வு நடத்தும் பொறுப்பு குறிப்பிட்ட பல்கலைக்கழகத்துக்கு 3 ஆண்டுகள் வழங்கப்படும். கடைசியாக 2015 முதல் 2018ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் செட் தேர்வை நடத்தியது.

இந்நிலையில் 2024 முதல் அடுத்த 3 ஆண்டுகளுக்கு தேர்வு நடத்த நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துக்கு தமிழக அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

இதனை தொடர்ந்து, செட் தேர்வு நடத்துவதற்கான விண்ணப்பங்களை பெற்று தேர்வு நாளை (வெள்ளிக்கிழமை), நாளை மறுநாள் (சனிக்கிழமை) ஆகிய 2 நாட்கள் நடைபெறும் என அறிவித்திருந்தது.

இந்த தேர்வில் கலந்துக்கொள்ள சுமார் 99 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்தனர். இந்த நிலையில் நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பதிவாளர் தரப்பில் இருந்து இன்று திடீரென ஒரு அறிவிப்பு வெளியாகி உள்ளது.

அந்த அறிவிப்பில் தொழில்நுட்ப காரணங்களுக்காக உதவி பேராசிரியர்கள் பணிக்காக நடத்தப்படும் மாநில அளவிலான தகுதி தேர்வு (செட்) ஒத்திவைக்கப்படுவதாக தெரிவித்துள்ளார். மீண்டும் தேர்வு நடத்தப்படும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். முதன்முறையாக இந்த தேர்வு இணைய வழியில் நடக்க இருந்தது குறிப்பிடத்தக்கது.

## குற்றால அருவிகளுக்கு தண்ணீர் வரத்து குறைந்தது



தென்காசி, ஜூன். 7


தென்காசி மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலா தலமான குற்றால அருவிகளில் ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் தண்ணீர் வரத்து அதிகரித்து குற்றால சீசன் களைகட்டும்.

ஆனால் தற்போது கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கி உள்ள நிலையில் போதுமான அளவு மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் மழை இல்லாததால் குற்றால அருவிகளுக்கு தண்ணீர் வரத்தும் குறைய தொடங்கி உள்ளது.

கடந்த 3 நாட்களாக தென்காசி மாவட்டத்தில் வெயிலின் தாக்கமானது படிப்படியாக அதிகரிக்க தொடங்கி உள்ளதால் குற்றாலம் மெயினருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவிகளில் தண்ணீர் வரத்து கணிசமாக குறைய தொடங்கி உள்ளது.

மேலும் சுற்றுலா பயணிகளின் வருகையும் குறைய தொடங்கி உள்ளது. தென்மேற்கு பருவமழை தீவிரமடையும் பட்சத்தில் குற்றால அருவிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரிக்க கூடும்.

## மழை எச்சரிக்கை: சதுரகிரியில் பக்தர்கள் மலையேற தயக்கம்



வத்திராயிருப்பு, ஜூன் 7

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே மேற்குாட தொடர்ச்சி மலையில் சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோவில் உள்ளது. அமாவாசை, பவுர்ணமிக்கு தலா 3 நாட்கள், பிரதோஷத்திற்கு 2 நாட்கள் என மாதம் 8 நாட்கள் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். கடந்த 4ந்தேதியில் இருந்து நாளை வரை 4 நாட்களுக்கு பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய அனுமதி வழங்கப்பட் டுள்ளது. வைகாசி மாத அமாவாசை தினத்தையொட்டி சென்னை, கோவை, நெல்லை, தூத்துக் குடி, விருதுநகர், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வாகனங்களில் நள்ளிரவு முதல் வருகை தந்து தாணிப்பாறை வனத்துறை கேட்பு முன்பு குவிந்தனர்.


காலை 6 மணிக்கு வனத்துறை கேட் திறக்கப்பட்டு பக்தர்கள் உடைமைகளை வனத்துறையினர்சோதனை செய்து அனுப்பினர்.

காலையில் வானம் மேகமூட்டத்துடன் இருந்தது. பக்தர்கள்வெயில் தெரியாத நிலையில் சாமி தரிசனம் செய்ய சென்றனர். இன்று மழை பெய்தால் அனுமதி வழங்கப்படாது என்று முன்கூட்டியே அறிவிப்பு வெளியாகி இருந்தது. எனவே தாணிப்பாறை வரை சென்று கோவிலுக்கு செல்ல முடியாமல் போய் விடுமோ என்ற அச்சத்தில் இன்று குறைந்த அளவிலான பக்தர்களே வருகை தந்திருந்தனர்.

வைகாசி அமாவாசை ஒட்டி சுந்தர மகாலிங்கம் சுவாமிக்கு பால், பழம், பன்னீர், இளநீர் உள்ளிட்ட 21 வகையான அபிஷேகங்கள் நடைபெற்றது. பின்னர் சுவாமி அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு காட்சி அளித்தார். பக்தர்கள் மொட்டை உள்ளிட்ட நேர்த்திக்கடன்களை செலுத் தினர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சுந்தர மகாலிங்கம் சாமி பரம்பரை அறங்காவலர் ராஜா என்ற பெரியசாமி, செயல் அலுவலர் ராமகிருஷ்ணன் ஆகியோர்செய்திருந்தனர். பக்தர்கள் பல முறை தொடர்ந்து கோரிக்கை விடுத்தும் தற்போது வரை மருத்துவக்குழுவினர்நியமிக்கப்படாதது அனைத்து தரப்பினருக்கும் ஒரு குறையாகவே இருந்து வருகிறது.

## எடப்பாடி பழனிசாமி மீது அ.தி.மு.க.வினர் கடும் அதிருப்தி





சென்னை, ஜூன் 7

தி.மு.க. கூட்டணிக்கு எதிராக அ.தி.மு.க., பாரதிய ஜனதா ஆகிய இரு கட்சிகள் தனித்தனியாக கூட்டணி அமைத்து போட்டியிட்டன. ஆனால் அது எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்த வில்லை.

கடந்த சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. தோல்வியை தழுவிய போதிலும் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தது. அப்போது அ.தி.மு.க. கூட்டணியில் பாரதிய ஜனதா கட்சியும் பா.ம.க.வும் இடம் பெற்று இருந்தன.

இப்படி வலுவான கூட்டணியை அமைத்து இருந்ததால் தி.மு.க. கூட்டணிக்கு எதிராக சொல்லிக் கொள்ளும் படியான வெற்றியை பெற முடிந்தது.

இந்த நிலையில் பாராளுமன்ற தேர்தலையொட்டி பாஜனதா கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. வெளியேறியது. சிறுபான்மையினர் வாக்குகளை பெற வேண்டும் என்ற எண்ணத்தில் பா.ஜனதா கூட்டணியில் இருந்து எடப்பாடி பழனிசாமி வெளியேறி இருந்தார்.

இதைத் தொடர்ந்து அ.தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணியை அமைக்க அவர் திட்டமிட்டார். ஆனால் அதற்கு பலன் கிடைக்கவில்லை. அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. இடம்பெறும் என்று எதிர் பார்க்கப்பட்டது.

ஆனால் பா.ம.க.வோ பாரதிய ஜனதாவுடன் கூட்டணியை அமைத்தது. இதனால் தி.மு.க.வுக்கு எதிரான வாக்குகள் இரண்டு பிரிவாக சிதறி தி.மு.க. கூட்டணிக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தியது என்றே கூறலாம்.

பல தொகுதிகளில் அ.தி.மு.க. கூட்டணியும், பா.ஜனதா கூட்டணியும் பெற்ற வாக்குகள் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளுக்கு இணையாக இருப்பதே இதற்கு சான்றாகும்.

இதன்மூலம் பா.ஜனதா, அ.தி.மு.க., பா.ம.க. தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகள் ஒன்றாக இணைந்து தி.மு.க. கூட்டணிக்கு எதிராக களம் கண்டிருந்தால் நிச்சயம் பெருவாரியான தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்க முடியும் என்றே அரசியல் நோக்கர்கள் கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

தி.மு.க. கூட்டணிக்கு எதிராக பல்வேறு கருத்துக்களை விமர்சனங்களை காரசாரமாக தெரிவித்து வரும் எடப்பாடி பழனிசாமி தி.மு.க.வை வீழ்த்துவதில் சரியாக வியூகம் வகுக்காததே தோல்விக்கு காரணம் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

கூட்டணி விஷயத்தில் எடப்பாடி பழனிசாமி விட்டுக்கொடுத்து பா.ஜனதாவுடன் கூட்டணியை தொடர்ந்திருக்க வேண்டும் என்றும் அந்தக் கூட்டணியில் பா.ம.க.வும் இடம் பெற்று இருந்தால் நிச்சயம் தி.மு.க. கூட்டணிக்கு எதிராக பலம் வாய்ந்த போட்டியை உருவாக்கி பல தொகுதிகளை கைப்பற்றி இருக்கலாம் என்றும் அ.தி.மு.க. தொண்டர்கள் கூறி வருகிறார்கள்.

இப்படி கூட்டணி விஷயத்தில் எடப்பாடி பழனிசாமி கோட்டை விட்டிருப்பதாகவே அ.தி.மு.க. வினர் குற்றம் சுமத்தியுள்ளனர். பா.ஜனதா கூட்டணியில் இடம் பெற்று வெற்றிகளை ருசித்து இருந்தால் தற்போதைய சூழலில் மத்திய மந்திரி சபையிலும் இடம் பெற்றிருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் என்றும் ஆனால் அதனை எடப்பாடி பழனிசாமி தவறவிட்டுள்ளதாகவே அரசில் நோக்கர்களும் கூறி வருகிறார்கள்.

அதுபோன்று மத்தியில் ஆளும் பா.ஜனதா அரசியல் அங்கம் வகிக்கும் சூழல் ஏற்பட்டிருந்தால் அதன் மூலம் தமிழகத்தில் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு பல்வேறு திட்டங்களை அ.தி.மு.க. எம்.பி.க்கள் கொண்டு வந்திருப்பார்கள் என்றும் அதன் மூலமாக 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கு அது நல்ல வழியை காட்டி இருக்கும் என்றும் அரசியல் நோக்கர்களும் அ.தி.மு.க. நிர்வாகிகளும் கூறி வருகிறார்கள்.

எனவே 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலை அ.தி.மு.க. வலுவான கூட்டணியை அமைத்து சந்திக்க வேண்டும் என்பதே அ.தி.மு.க. தொண்டர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

தற்போதைய சூழலில் தி.மு.க. கூட்டணி வலுவானதாக இருக்கும் நிலையில் அதனை எதிர்கொள்ள பாரதிய ஜனதாவுடன் கைகோர்ப்பதில் எந்த தவறும் இல்லை என்றும் அப்போதுதான் தி.மு.க.வை வீழ்த்த முடியும் என்றும் அ.தி.மு.க. தொண்டர்களும் கூறி வருகிறார்கள்.

எனவே 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் எடப்பாடி பழனிசாமி தற்போதைய கூட்டணியை வலுவாக்கும் முயற்சியில் தீவிரம் காட்ட வேண்டும் என்றும் அப்போதுதான் அ.தி.மு.க.வை மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டுவர முடியும் என்றும் கட்சி நிர்வாகிகள் கூறி வருகிறார்கள்.

எனவே அதனை கருத்தில் கொண்டு வரும் நாட்களில் அ.தி.மு.க. மூத்த நிர்வாகிகளும் எடப்பாடி பழனிசாமியும் திட்டமிட வேண்டும் என்பதே ஒட்டு மொத்த அ.தி.மு.க. தொண்டர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## ராமேசுவரத்தில் திடீரென உள்வாங்கிய அக்னி தீர்த்தக்கடல்



ராமேசுவரம், ஜூன் 7

தென்னகத்து காசி என்று போற்றப்படும் பிரசித்தி பெற்ற ராமேசுவரம் ராம நாத சுவாமி கோவிலுக்கு நாள்தோறும் நாடு முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்கின்றனர். அமாவாசை நாளில் இங்குள்ள அக்னி தீர்த்தக் கடலில் புனித நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்வது புண்ணியமாக கருதப்படுகிறது.

எனவே மாதந்தோறும் வரும் அமாவாசை நாட்களில் வழக்கத்தை விட பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். கடந்த ஒரு மாதமாக பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதால் ராமேசுவரத்தில் வழக்கத்தைவிட பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகமாக இருந்தது. தற்போது பள்ளி விடுமுறை நீட்டிக்கப்பட்டு இருப்பால் ராமேசுவரத்துக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் வைகாசி மாத அமாவாசையை முன்னிட்டு நேற்று முதலே பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலும் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ராமேசுவரத்தில் குவிந்தனர். அவர்கள் இன்று அதிகாலை அக்னி தீர்த்தக் கடலில் புனித நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர்.

வழக்கமாக மன்னார் வளைகுடா கடல் பகுதியில் காற்றின் வேகம் அதிகரித்து காணப்படும் நிலையில் அக்னி தீர்த்தக் கடலில் நீர் மட்டம் உள்வாங்கி காணப்பட்டது.


அதன்படி இன்று காலை அக்னி தீர்த்த கடல் திடீரென உள்வாங்கியது. இந்த நிகழ்வு அங்கு வந்த பக்தர்களுக்கு புதியதாக இருந்தது. சுமார் 150 மீட்டர் தூரம் கடல் உள் வாங்கியதால் பவளப்பாறைகள் வெளியில்தெரிந்ததோடு சேறும், சகதியுமாக காணப்பட்டன. இதனால் பக்தர்கள் நீராட முடியாமல் கடும் சிரமம் அடைந்தனர். அங்கு நிறுத்தப்பட்டிருந்த படகுகளும் தரைதட்டி நின்றது.

சில மணி நேரத்திற்கு பின் மீண்டும் கடல் இயல்பு நிலைக்கு மாறியது. கடல் உள்வாங்குவது உள்ளூர் மக்களுக்கு வழக்கமானதாக இருந்தாலும், வெளியூரிலிருந்து வந்தவர்களுக்கு புதிய அனுபவமாக இருந்ததாக அவர்கள் தெரிவித்தனர். மேலும் அவர்கள் உள்வாங்கிய கடலை செல்போன்களில் படம் பிடித்துக்கொண்டனர்.

இதற்கிடையே அக்னி தீர்த்த கடலில் ஏராளமான பக்தர்கள் நீராடிக் கொண்டு இருக்கும் போதுதிடீரெனநகராட்சி சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து கழிவு நீரை திடீரென திறந்து விட்டதால் நுர்நாற்றம் வீசியது. அந்த பகுதியில் நீராடிக் கொண் டிருந்த பக்தர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

அக்னி தீர்த்தம் என இறை நம்பிக்கையுடன் நீரா டும் இடத்தில் கழிவு நீர் திறந்து விடுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண் டும். அந்த பகுதியில் நீராடும் பக்தர்களுக்கு தொற்று நோய் ஏற்பட்டால் யார் பொறுப்பு என கேள்வி எழுப்பினர்.

## ஊ சொல்றியா..பாடலுக்கும் விவாகரத்திற்கும் என்ன சம்பந்தம்? மனம் திறந்த சமந்தா



கடந்த சில வருடங்களுக்கு முன்பு நடிகை சமந்தாவும், தெலுங்கு நடிகர் நாகசைதன்யாவும் காதலித்து திருமணம் செய்து பின்னர் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விவாகரத்து பெற்று பிரிந்து விட்டனர். அந்த சமயத்தில் வெளியான படம்தான் 'புஷ்பா தி ரைஸ்'. இந்த படம் அனைத்து மொழி ரசிகர்களிடமும் நல்ல வரவேற்பை பெற்று கிட்டத்தட்ட ரூ.400 கோடி வரை வசூல் செய்து சாதனை படைத்தது. அதேசமயம், இந்த படத்தில் இடம்பெற்ற பாடல்களும் ரசிகர்களிடம் பெரிதும் கவனம் பெற்றன. குறிப்பாக இப்படத்தில் வந்த ஊ சொல்றியா.. பாடல் மிகவும் பிரபலமானது. இந்த பாடலில் நடிகை சமந்தா நடனமாடினார். இந்நிலையில், இந்நிலையில், நடிகை சமந்தா பேசியதாவது,

ஊ சொல்ரியா பாடல் என்னிடம் வந்தபோது என் குடும்பத்தார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என எல்லோரும் இதில் நடிக்க வேண்டாம் என்று கூறினர். ஏனென்றால், அது நான் விவாகரத்தை அறிவித்த சமயம். நான் ஏன் அதை மறுக்க வேண்டும். நான் எந்த தவறும் செய்யவில்லை. திருமண வாழ்க்கையில் என் 100 சதவிகிதத்தை கொடுத்தேன் ஆனால், அது பயனளிக்கவில்லை. விவாகரத்தையும் ஊ சொல்ரியா பாடலில் நடிப்பதையும் நான் ஏன் சம்பந்தப்படுத்த வேண்டும். இவ்வாறு கூறினார்.

## 'ரஜினிகாந்துக்கும் எனக்கும் பல ஆண்டுகளாக...' நடிகர் சத்யராஜ்



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் நடிகர் ரஜினிகாந்த் நடிக்க இருக்கும் படம் 'கூலி'. இப்படத்திற்கு அனிருத் இசையமைக்க உள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் துவங்க உள்ளது. இப்படத்தில் 38 வருடங்களுக்கு பிறகு சத்யராஜ் நடிக்க உள்ளார்.

இந்நிலையில், ரஜினிகாந்த் படத்தில் இவ்வளவு காலம் ஏன் நடிக்கவில்லை, ஏதேனும் இருவருக்கும் இடையே பிரச்சினை உள்ளதா? என்ற கேள்விக்கு நடிகர் சத்யராஜ் பதிலளித்துள்ளார். அவர் பேசியதாவது,


"நான் திரைப்படங்களில் கதாநாயகனாக நடிக்க ஆரம்பித்த பிறகு, இரண்டு ரஜினிகாந்த் படங்களில் நடிக்க தயாரிப்பாளர்கள் என்னை அணுகினர். அதில் ஒன்று சிவாஜி மற்றொன்று எந்திரன். கதாபாத்திரத்தில் எனக்கு திருப்தி இல்லாததால் அதில் நடிக்க மறுத்தேன். "இந்த காரணங்களைத் தவிர, எங்களுக்கு என்ன பிரச்சினைகள் உள்ளன?". ரஜினிகாந்துக்கும் எனக்கும் பல ஆண்டுகளாக எந்த பிரச்சினையும் இல்லை", இவ்வாறு பேசினார்.

## 'சீதா ராமம்' படத்தில் நீக்கப்பட்ட காட்சி இணையத்தில் வைரல்



துல்கர் சல்மான், மிருணாள் தாகூர் நடிப்பில் கடந்த 2022ம் ஆண்டு தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் வெளியான 'சீதா ராமம்' திரைப்படம் பெரும் வெற்றிப்படமாக அமைந்தது. 1964ம் ஆண்டு கால கட்ட பிண்ணனியில் இந்த படம் எடுக்கப்பட்டிருந்தது.

காஷ்மீர் எல்லையில் பணியாற்றும் ராணுவ அதிகாரி முகவரி இல்லாமல் தனக்கு வரும் காதல் கடிதங்களை படித்து, அதை அனுப்பிய பெண்ணை கண்டுபிடிக்கிறார். அந்த பெண்ணுடன் அவரால் சேர்ந்து வாழ முடிந்ததா என்பதை உருக்கமாக படமாக்கி இருந்தனர்.



காதல் கடிதங்களை அனுப்பும் பெண்ணாக மிருணாள் தாகூர் நடித்து இருந்தார். இதில் ராஷ்மிகா மந்தனாவும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். அப்ரீன் அலி என்ற கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

இந்நிலையில், இப்படத்தில் நீக்கப்பட்ட ராஷ்மிகாவின் 1 நிமிட காட்சி தற்போது வெளியாகியுள்ளது. அதில், ஒரு கல்லூரிக்குள் காரில் செல்லும் ராஷ்மிகா அங்கு ஒரு பெண்ணிடம் பேசுகிறார். பின்னர் வெளியே வந்து அவர் சென்ற கார் டிரைவரின் நேர்மையை சந்தேகிக்கிறார், இவ்வாறு உள்ளது. தற்போது இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

## மலையாள நடிகர் ஷேன் நிகாம் தமிழில் அறிமுகமாகும் படத்தின் படப்பிடிப்பு நிறைவு



கடந்த 2016ம் ஆண்டு வெளியான 'கிஸ்மத்' படம் மூலம் மலையாள சினிமாவில் நாயகனாக அறிமுகமானவர் நடிகர் ஷேன் நிகாம். தொடர்ந்து அவரது நடிப்பில் வெளியான 'இஷ்க்', 'கும்பளங்கி நைட்ஸ்', 'ஆர்டிஎக்ஸ்' உள்ளிட்ட படங்கள் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றன. இந்த நிலையில் ஷேன் நிகாம் தற்போது 'மெட்ராஸ்காரன்' என்ற படத்தின் மூலம் தமிழில் நாயகனாக அறிமுகமாகிறார்.

இயக்குனர் வாலி மோகன் தாஸ் இயக்கியுள்ள இந்த படத்தில் கலையரசன், நிஹாரிகா கொனிடேலா, ஐஸ்வர்யா தத்தா, கருணாஸ், பாண்டியராஜன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். எஸ்.ஆர் புரொடக்சன்ஸ் சார்பில் ஜெகதீஷ் தயாரித்துள்ள இந்த படத்துக்கு சாம் சி. எஸ் இசையமைத்துள்ளார். பிரசன்னா எஸ் குமார் ஒளிப்பதிவு செய்துள்ளார். ஆர் வசந்தகுமார் படத்தொகுப்பு செய்கிறார்.

இந்த நிலையில் விறுவிறுப்பாக நடைபெற்று வந்த இந்த படத்தின் படப்பிடிப்பு தற்போது நிறைவடைந்ததாக படக்குழு தெரிவித்துள்ளது. இதனை படத்தின் மேக்கிங் வீடியோவை வெளியிட்டு படக்குழு அறிவித்துள்ளது. இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

## பாரம்பரிய சேலையில் மீனாட்சி சவுத்ரி புகைப்படங்கள் வைரல்



தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகையாக வலம் வருபவர் மீனாட்சி சவுத்ரி. இவர் 2021ம் ஆண்டு வெளிவந்த இச்சட்டா வாகனுமுலுநில்லுபருடா என்ற தெலுங்கு படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானார். சமீபத்தில் மகேஷ் பாபு நடிப்பில் வெளிவந்த குண்டூர்காரம் படத்தில் இவர் நடித்திருந்தார். தற்போது விஜய் நடிப்பில் உருவாகி வரும் கோட் படத்தில் நடித்து வருகிறார்.

சினிமா மட்டுமின்றி சமூக வலைதளங்களில் ஆர்வம் காட்டி வருகிறார். இதனால், அடிக்கடி தனது புகைப்படங்கள் மற்றும் வீடியோகளை இணையத்தில் பகிர்ந்து வருகிறார். இந்நிலையில் பாரம்பரிய சேலை அணிந்தபடி இருக்கும் புகைப்படத்தை தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

சிலையாக காட்சியளிக்கும் மீனாட்சி சவுத்ரியின் புகைப்படங்களை பார்த்த ரசிகர்கள் செயற்கை தொழில்நுட்பத்தை மிஞ்சிய அழகில் இருப்பதாக வலைதளங்களில் கருத்து பதிவிட்டு வருகின்றனர்.

## சென்னை: கூட்டத்தில் சிக்கி தவித்த மமிதா பைஜூ அத்துமீறிய ரசிகர்கள் வீடியோ வைரல்

மலையாளத்தில் வெளியாகி ரூ.100 கோடிக்கு மேல் வசூல் குவித்த 'பிரேமலு' படத்தின் மூலம் ரசிகர்கள் மனதை கொத்தாக அள்ளிய இளம் கதாநாயகி மமிதா பைஜுவுக்கு பட வாய்ப்புகள் குவிகின்றன. தமிழில் ஜி.வி.பிரகாஷ் ஜோடியாக 'ரெபல்' படத்திலும் நடித்தார். தற்போது விஷ்ணு விஷால் ஜோடியாக புதிய படத்தில் நடித்து வருகிறார். தென் இந்திய திரையுலகில் அதிக படங்களில் நடித்து மளமளவென முன்னேறி வருகிறார். இந்த நிலையில் சென்னை அண்ணாநகரில் நடந்த ஒரு கடை திறப்பு நிகழ்ச்சிக்கு மமிதா பைஜூவை அழைத்து வந்தனர். அவரை காண ஏராளமான ரசிகர்கள் திரண்டு நின்றனர்.

மமிதா காரில் வந்து இறங்கியதும் கூட்டத்தில் சிக்கினார். அவரை ரசிகர்கள் சூழ்ந்து கொண்டு செல்பி எடுக்கவும், கைகுலுக்கவும் முயன்றனர். அப்போது சிலர் கூட்ட நெரிசலை பயன்படுத்தி மமிதா பைஜூவின் உடம்பில் கண்ட இடங்களில் தொட்டு அத்துமீறினர்.

அவர்கள் பிடியில் சிக்கி மமிதா பைஜூ தவித்தார். உடனடியாக அதிக பாதுகாவலர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் மமிதா பைஜூவை பத்திரமாக பாதுகாப்போடு அழைத்துச்சென்றனர். இது குறித்தான வீடியோ வெளியாகி வைரலாகி வருகிறது.

## இந்தோனேசிய ஓபன் பேட்மிண்டன்: முதல் சுற்றில் பி.வி. சிந்து அதிர்ச்சி தோல்வி

இந்தோனேசிய ஓபன் பேட்மிண்டன் போட்டி தலைநகர் ஜகர்த்தாவில் நேற்று தொடங்கியது. மொத்தம் ரூ.10¾ கோடி பரிசுத்தொகைக்கான இந்த போட்டியில் முன்னணி வீரர், வீராங்கனைகள் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த நிலையில் இந்த போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற முதல் சுற்றில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து, சீன தைபேயின் வென் சி ஹூவுடன் மோதினார். இந்த போட்டியில் பி.வி. சிந்து 15– 21, 21– 15, 14– 21 என்ற செட் கணக்கில் வென் சி ஹூவிடம் தோற்று வெளியேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் இந்திய வீராங்கனை ஆகர்ஷி காஷ்யப்பை 21– 18, 21– 6 என்ற செட் கணக்கில் தாய்லாந்து வீராங்கனை ரட்சனோக் இன்டனான் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

## டி20 உலகக்கோப்பை: ஹர்திக் அபார பந்துவீச்சு... அயர்லாந்து 96 ரன்களில் ஆல் அவுட்




டி20 உலகக்கோப்பை தொடரில் இன்று நடைபெற்று வரும் லீக் ஆட்டத்தில் இந்தியா அயர்லாந்து அணிகள் விளையாடி வருகின்றன. இதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்ய களமிறங்கிய அயர்லாந்து ஆரம்பம் முதலே இந்திய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திணறியது. அந்த அணியின் பேட்ஸ்மேன்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர். இறுதி கட்டத்தில் டெலானி அதிரடியாக விளையாடி அயர்லாந்து கவுரமான நிலையை எட்ட உதவினார்.

வெறும் 16 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த அயர்லாந்து 96 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அந்த அளவுக்கு சிறப்பாக பந்து வீசிய இந்தியா தரப்பில் ஹர்திக் பாண்ட்யா 3 விக்கெட்டுகளும், அர்ஷ்தீப் சிங் மற்றும் பும்ரா தலா 2 விக்கெட்டுகளும் சிராஜ், அக்சர் தலா 1 விக்கெட்டும் வீழ்த்தி அசத்தினர். அயர்லாந்து தரப்பில் அதிகபட்சமாக டெலானி 26 ரன்கள் அடித்தார்.

## டி20 உலகக்கோப்பை: இந்தியா எங்களை பழிவாங்க விரும்பும் ஆஸி. வீரர் கணிப்பு



9வது டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் தற்போது லீக் ஆட்டம் நடைபெற்று வருகிறது. இதில் இந்திய அணி தங்களுடைய முதல் ஆட்டத்தில் இன்று அயர்லாந்தை எதிர்கொள்கிறது. இந்திய அணி லீக் சுற்றில் வெற்றி பெற்றால், சூப்பர் 8 சுற்றில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இலங்கை போன்ற அணிகளை எதிர்கொள்ளும்.

இந்த நிலையில் இந்தத் தொடர் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஆஸ்திரேலிய அணியின் அதிரடி தொடக்க வீரர் டிராவிஸ் ஹெட், இந்தியா தங்களை பழிவாங்க விரும்பும் என்று கணித்திருக்கிறார். இது குறித்து பேசிய அவர்,

"இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் மீண்டும் இறுதிப் போட்டியில் மோதினால் அது நன்றாக இருக்கும் என நினைக்கிறேன். இந்தியாவில் அனைவரும் இதை நிச்சயம் விரும்புவார்கள். ஏனென்றால் கடந்த இரண்டு இறுதிப் போட்டியிலும் என்ன நடந்தது என்பதை பார்க்கையில் நிச்சயம் இந்தியா அதற்கு பழித் தீர்க்க விரும்பும் என்று நினைக்கின்றேன். அப்படி மட்டும் நடந்தால் நிச்சயம் ரசிகர்களின் ஆரவாரம் இருக்கும்.

அப்படி நடக்கும் பட்சத்தில் என்ன முடிவு வரும் என்பதை பார்க்க நான் ஆவலுடன் இருக்கின்றேன். அப்படி நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. ரோகித் சர்மா தன்னுடைய பார்மை குறித்து நிச்சயம் கவலைப்பட மாட்டார். அவர் சிறப்பான ஒரு தலைவராக இந்திய அணிக்கு இருக்கின்றார். இந்திய அணியில் எனக்கு தெரிந்து எந்த பிரச்சனையும் இருப்பதுபோல் தெரியவில்லை. ஒரு நல்ல கேப்டனின் கைகளில்தான் இந்திய அணி இருக்கின்றது. இந்த தொடரில் இன்னும் 45 அணிகள் கோப்பையை வெல்லும் வாய்ப்பில் இருக்கின்றன. அவர்கள் நிச்சயம் அதிரடி ஆட்டத்தைதான் இந்த தொடரில் விளையாடுவார்கள்" என்று கூறினார்.

## உலகக் கோப்பை கால்பந்து தகுதி சுற்று; இந்தியா குவைத் அணிகள் இன்று பலப்பரீட்சை



23வது உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கான ஆசிய மண்டல தகுதி சுற்றுக்கான 2வது ரவுண்டு ஆட்டங்கள் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் இந்திய அணி 'ஏ' பிரிவில் இடம் பிடித்துள்ளது. கத்தார், குவைத், ஆப்கானிஸ்தான் ஆகியவை இந்த பிரிவில் உள்ள மற்ற அணிகளாகும். இந்த போட்டி தொடரில் இன்று இரவு 7 மணிக்கு கொல்கத்தாவில் உள்ள சால்ட் லேக் ஸ்டேடியத்தில் நடைபெறும் லீக் ஆட்டத்தில் இந்திய அணி, குவைத்தை எதிர்கொள்கிறது. இதில் இந்தியா வெற்றி பெற்றால் உலகக் கோப்பை 3வது ரவுண்டுக்கு முதல் முறையாக முன்னேறும் வாய்ப்பு உருவாகும் என்பதால் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதே நேரத்தில் ஏற்கனவே இந்தியாவிடம் 01 என்ற கோல் கணக்கில் உதை வாங்கியிருந்த குவைத் அணி அதற்கு பதிலடி கொடுக்க கடுமையாக முயற்சிப்பார்கள்.இந்திய அணியின் கேப்டன் சுனில் சேத்ரி இந்த ஆட்டத்துடன் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெறுகிறார். அவரை வெற்றியுடன் வழியனுப்பும் உத்வேகத்துடன் இந்திய வீரர்கள் வரிந்து கட்டுவார்கள் என்பதால் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது.

இந்திய அணி இதுவரை 4 ஆட்டங்களில் ஆடி ஒரு வெற்றி, ஒரு டிரா, 2 தோல்வி என 4 புள்ளிகளுடன் 2வது இடத்திலும், குவைத் 4 ஆட்டங்களில் ஆடி ஒரு வெற்றி, 3 தோல்வி என 3 புள்ளிகளுடன் கடைசி இடத்திலும் இருக்கிறது.


## பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்; காலிறுதியில் ரைபகினா அதிர்ச்சி தோல்வி



பல முன்னணி வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ள பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடர் பாரீசில் களிமண் தரை மைதானங்களில் நடந்து வருகிறது. இந்த தொடரில் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் கஜகஸ்தானின் எலினா ரைபகினா இத்தாலியின் ஜாஸ்மின் பவுலினி உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 26 என்ற புள்ளிக்கணக்கில் இழந்த ரைபகினா, 2வது செட்டை 64 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார். இதையடுத்து விறுவிறுப்பாக நடைபெற்ற 3வது செட்டில் முன்னணி வீராங்கனை ரைபகினா வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட வேளையில் 46 என்ற புள்ளிக்கணக்கில் அதிர்ச்சி தோல்வி கண்டார்.

இறுதியில் முன்னணி வீராங்கனையான எலினா ரைபகினா 26, 64, 46 என்ற புள்ளிக்கணக்கில் இத்தாலியின் ஜாஸ்மின் பவுலினியிடம் தோல்வி கண்டு தொடரில் இருந்து வெளியேறினார்.



அழுக்கற் றகன்றாரும் இல்லைஅஃ தில்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரு மில்

விளக்கம்:
பொறாமைப்பட்டுப் பெருமையுற்றவரும் உலகத்தில் இல்லை; பொறாமை இல்லாதவராய் மேம்பாட்டிலிருந்து நீங்கியவரும் இல்லை.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.